REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 4 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 262 | November 04, Wednesday, 2020 | 16 பக்கங்கள் | 30/-

நாட்டில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை;

## வைத்திய பீடங்களுக்கு 371 மேலதிக மாணவர் இணைப்பு

சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்



நாட்டில் ஏற்பட்டுள்ள வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. 06

மத அனுட்டானங்களில் எனக்கு நம்பிக்கை; கடவுளின் அருளைப் பெறவே கங்கையில் ஆசிர்வதிக்கப்பட்ட நீர் கலப்பு

# கொவிட் தொற்றை இல்லாதொழிக்க உயிரைத் தியாகம் செய்யவும் தயார்



கடலில் குதித்தால் வைரஸ் இல்லாது போகும் எனில் அதற்கும் தயார்

ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிசாந்தன்

கொவிட் 19 வைரஸ் தொற்றை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கு




...காண்ட ...கையில் ...ிர்க்கட் ...ங்களை

பாராளுமன்றத்தில் நேற்று மருத்துவ கட்டளையின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

வெளியிட்டு வருகின்றனர்.

கடலில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டால் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று இல்லாதொழியும் என்றால் அதற்கும் நான் தயார்.

கடவுளின் அருளை பெறுவதற்காகவே தான் அதனை செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் சுகாதார அமைச்சராகிய நான், கொரோனாவை ஒழிப்பதற்கு எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தயார்.

சுகாதார விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை கடவுளின் அருளை பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட தயாராகவுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார். உறுதியான பௌத்த பிரஜை 06

## முஸ்லிம்களின் உடல்களை அ... குறித்து அரசாங்கம் தீவி...



பல தரப்பு கோரிக்கை விடுத்திருப்...

ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிசாந்தன்

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என பல தரப்பினர் விடுத்துள்ள வேண்டுகோள்களை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் உடல்களை தகனம் செய்யவேண்டாம் என இந்த வருட ஆரம்பத்தில் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார். 06



மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கையடுத்து மூடப்பட்டிருந்த கொழும்பு மொத்த விற்பனை நிலையங்கள் நேற்று திறக்கப்பட்டு பொருட்கள் விநியோகித்ததை படத்தில் காணலாம்.

## போலி செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்ற வேண்டாம்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



ஊரடங்கு உத்தரவு தொடர்பில் போலியான செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்ற வேண்டாமென சமூக ஊடகங்களுக்கு கொவிட்19 யை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 06

## திருமண வீட்டிற்கு 50 மரண சடங்கிற்கு 25

சுகாதார அமைச்சு ஆலோசனை

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படாத பிரதேசங்களில் இடம்பெறும் திருமணங்கள் மற்றும் மரண சடங்குகளுக்கு வரும் நபர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த சுகாதார அமைச்சு ஆலோசனை 06

கொரோனா வைரஸ் தொற்று;



## உயிரிழந்தோர் தொகை 23 ஆக அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை நேற்று 23 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் (03) கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு பெண்களே இவ்வாறு மரணித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதான பெண்ணும் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதான பெண்ணும் நேற்று மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்று முன்தினம் மூன்று பெண்கள் வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக 06

கொரோனாவால் இறக்கும் முஸ்லிம் சடலங்கள் அடக்கம் செய்யும் விவகாரம்

## இவ்வாரம் கூடும் விசேட வைத்திய நிபுணர்கள் குழுவில் மீள் பரிசீலனை

எதிரணியின் குற்றச்சாட்டுக்கு பாராளுமன்றத்தில் அமைச்சர் பவித்ரா பதில்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரம் குறித்து இவ்வாரம் கூடவுள்ள விசேட வைத்திய நிபுணர்கள் குழுவில் மீள் பரிசீலனை செய்யப்படுமென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுக்கு விதிகள் பிரகாரம் வெளியிடப்பட்ட 2055/54 மற்றும் 2155/15 ஆம் இலக்க வர்த்தமானிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு 06

## அடக்கம் செய்ய அனுமதி வழங்க துரித நடவடிக்கை அவசியம்

அரசாங்கத்தை கோருகிறார் மு.கா தலைவர்



ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிசாந்தன்

கோவிட் 19 தொற்றினால் இறக்கும் முஸ்லிம் சடலங்களை புதைக்க அனுமதிப்பது தொடர்பில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார். 06



## காத்தான்குடியில் பலசரக்கு நிலையத்தில் நேற்று பாரிய தீ

## ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்க விசேட நடைமுறை

சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தல்

தேசிய பொறிமுறை தயாரித்தால்

## கொரோனாவை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு JVP ஆதரவு